செ. கு. எண்: 164

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 30.6.2013

சென்னை, பல்லவன் சாலை அருகே 16.6.2013 அன்று இருசக்கர வாகனம் மீது மாநகர அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த ஏழுகிணறு பகுதியைச் சேர்ந்த சந்தீப் என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர்கோட்டம் அருகே 18.6.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது மாநகர அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த விருகம்பாக்கத்தைச் சேர்ந்த தேவநாயக் சபாவக்த் என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர், கீழவாசல் சந்திப்பு அருகே 19.6.2013 அன்று வேன் மீது அரசுப் பேருந்து மோதியதில், வேனில் பயணம் செய்த திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூரைச் சேர்ந்த கோவிந்தராஜுலு என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி – சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலையில் 19.6.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த இலால்குடியைச் சேர்ந்த மாணிக்கவாசகம் என்பவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 20.6.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், இறச்ச குளம் சந்திப்பு அருகே 10.6.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்து அகஸ்தீஸ்வரம் வட்டம், தெங்கம்புதூர் கிராமம், புத்தளம் பகுதியைச் சேர்ந்த திரு. சுப்பையா என்பவரின்

மகன் லெட்சுமணன் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 14.6.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த சந்தீப், தேவநாயக் சபாவக்த், கோவிந்தராஜுலு, மாணிக்கவாசகம் மற்றும் லெட்சுமணன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்த சந்தீப், தேவநாயக் சபாவக்த் கோவிந்தராஜுலு, மாணிக்கவாசகம் மற்றும் லெட்சுமணன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**